# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

மனு எண்: 0209/2017 ஊராட்சி

ஆணை எண்: 0020/2017

நாள்: 16/02/2017

மு. முத்துலெட்சுமி,
முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்,
263, காமராஜர் காலனி,
திருப்பாச்சேத்தி அஞ்சல் – 630 610. - மனுதாரர்

எஸ். தனலெட்சுமி,
முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவி,
திருப்பாச்சேத்தி ஊராட்சி,
திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம் மற்றும் பலர். - எதிர் மனுதாரர்கள்

## ஆணை:

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்பாச்சேத்தி ஊராட்சியை சார்ந்த திருமதி. மு. முத்துலெட்சுமி அவர்களின் 6.2.2017 நாளிட்ட மனுவில், திருப்பாச்சேத்தி ஊராட்சியில் கடந்த 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2014-2015 ஆண்டு வரை ஊராட்சி மன்றத் தலைவியாக இருந்த திருமதி. S. தனலெட்சுமி, ஊராட்சி செயலர் (பொறுப்பு) சி. முத்துராமலிங்கம், ஊராட்சி மன்றத் தலைவியின் கணவர் திரு. R. செந்தில்குமார் மற்றும் மாமனார் திரு. S. இராமலிங்கம் மற்றும் திரு. க. செல்வம் ஆகியோருடன் கூட்டாக சேர்ந்து ஊராட்சி நிர்வாகத்தில் தினசரி சந்தை வரி, வாரச் சந்தை உரிமம் வழங்குதலில் முறைகேடு, வரி ஏய்ப்பு, போலியான வவுச்சர் மூலம் பணம் எடுத்தல், விதிகளை மீறி கூடுதல் செலவீனம் மேற்கொள்ளுதல், போன்ற முறைகேடுகள் புரிந்தும்,

பசுமை வீடுகள் கட்டுதல் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்டுதலில் முறைகேடுகள் புரிந்தும், ஊராட்சி/அரசுப்பணம் ரூ.2,03,42,203/- (ரூபாய் இரண்டு கோடியே மூன்று லட்சத்து, நாற்பத்திரண்டாயிரத்து இருநூற்று மூன்று மட்டும்) க்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர் என தெரிவித்து உரிய விசாரணை செய்து சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)-ன் படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம். சிவகங்கை அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திருமதி. மு. முத்துலெட்சுமி அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

14/3/2017

செயலாளர்.

பெறுநர்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   சிவகங்கை மாவட்டம்,
   சிவகங்கை. (w.e.)

2. திருமதி. மு. முத்துலெட்சுமி,
   263, காமராஜர் காலனி,
   திருப்பாச்சேத்தி அஞ்சல் – 630 610,
   சிவகங்கை மாவட்டம்.

2/3/17